Registered as a News Paper
பக்கங்கள் : 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 14 (30 - 08 - 1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை 194

## யாழ். வைத்திய சாலையில் தடுப்பு ஊசிகளுக்கு தட்டுப்பாடு

யாழ் போதனா வைத்தியசாலையில் ஏற்புத் தடுப்பு ஊசி மருந்து முடிவடைந்து விட்டதாக வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது. பிராந்திய சுகாதார பணிமனையின் மூலம் ஏனைய வைத்தியசாலைகளிலிருந்து எடுக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டுவந்த மருந்தும் நேற்றுடன் முற்றாக முடிவடைந்துவிட்டது என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. அத்துடன் ஏ. ஆர். வி. எனப்படும் விசர்நாய்க்கடி தடுப்பூசி போடுவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே இம் மருந்தை ஏற்றத்தொடங்கியவர்கள் தொடர்ந்தும் ஏற்றிக் கொள்ளலாம் எனவும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## கம்பியால் குத்திகொலை

(யாழ்ப்பாணம்)


இருவருக்கிடையில் சண்டை நடைபெற்ற போது சமரசம் செய்து வைக்கச் சென்றவர் கம்பியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்.

நேற்று மானிப்பாயில் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் பி. உதயகுமார் (வயது 22) என்பவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

# லலித் அத்துலத்முதலி சுடப்பட்டார்?

# தென்னிலங்கையில் பெரும் பரபரப்பு

## ஆபத்தான நிலையில் மெய்ப்பாதுகாவலர் கையெழுத்து வேட்டையின்போது சம்பவம்



[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சருமான லலித் அத்துலத் முதலி நேற்று தெகிவளையில் துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டதாக ஏ. எவ். பி செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தில் இவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. இதேவேளை, லலித் அத்துலத் முதலி சுடப்பட்டதாகச் செய்தி பரவியதையடுத்து தென்னிலங்கையில் பரபரப்பும் பதற்றமும் உருவாகியதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் முதுகில் படுகாயமடைந்த நிலையில் அத்துலத்முதலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடுள்ளார் எனவும்,

இவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் துப்பாக்கியால் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் உள்ளார் எனவும்,

இத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட ஆறுபேரை இனம்காண பொதுமக்கள் தயாராக உள்ளதாகவும், தாக்குதலை மேற்கொண்ட கோஷ்டியினர் வந்த வாகனம் அநாதரவாக விடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் ஏ எப். பி. செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இதேவேளை எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் சுடப்பட்டதாக நேற்று வெளிவந்த செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை என பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

நேற்றுகாலைகிடைத்த செய்திகளின்படி தலைநகர் கொழும்பின் தென்பகுதியான மவுண்டிலேனியாவில் லலித் அத்துலத்முதலி தாக்கப்பட்டதாகவும் கூடிய மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்காக அத்துலத்முதலியின் பாதுகாப்பு அதிகாரி வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இவ் அசம்பாவிதத்தில் எவரும் பாரதூரமான காயமடையவில்லை எனவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

## மீண்டும் அகதிகளை அனுப்பும் வேலை ஆரம்பம்

இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் வேலை மீண்டும் நாளைமுதல் ஆரம்பமாகும் எனத் தெரிய வருகிறது.

சென்னை உயர் நீதிமன்றின் உத்தரவொன்றைத் இடைநிறுத்தக் கட்டளைக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்தே பணிமீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தமிழ் நாடு அரசின்புனர்வாழ்வுத்துறைச் செயலாளர் பி. பாஸ்கரதாஸ் அறிவித்துள்

புலிகளால் கைப்பற்றப்பட்ட படகின் பக்கத் தோற்றம்

## கடற் புலிகளின் அபார சாதனை

# கடற்படை நவீன விசைப்படகு

# புலிகளால் கைப்பற்றப்பட்டது

# ...புலிகளால் கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான நவீனரக நீர் உந்து விசைப்படகு ஒன்று கடற்புலிகளால் நேற்றுக் கைப்பற்றப்பட்டது.

நேற்று அதிகாலை மண்டைதீவு கூட்டு இராணுவ கடற்படைத் தளத்தில் தரித்து நின்ற இந்த விசைப்படகை கடற்புலி வீரர்கள் மின்னல்வேக அதிரடித் தாக்குதல் மூலம் சேதம் எதுவுமின்றி கைப்பற்றினர்.

42 அடி நீளமும், 12 அடி அகலமும், இரண்டு ஜெட் இயந்திரங்களும் கொண்ட இந்த நவீன விசைப்படகு கடற்படையினரால் குடா நாட்டுக் கடலில் ரோந்திற்கு பாவிக்கப்பட்டு வந்தது. இந்தப் படகிலிருந்து பல்வேறு நவீனரக கடற்போர்த் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

அண்மைக்காலத்தில் கடற்புலிகள் மேற்கொண்ட துணிகரமான வீரசாதனைகளில் இதுவும் ஒன்றாகும்.

நேற்று அதிகாலை 1-30 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலி வீரர்களின் தாக்குதல் அணி ஒன்று மண்டைதீவு கூட்டு இராணுவ கடற்படை தளம் மீது மின்னல் வேகத்தாக்குதல் ஒன்றை நடத்தியது. இத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நீருந்து விசைப்படகு பற்றிய குறிப்புக்கள்

கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட நீருந்துவிசைப் படகு பற்றிய சில குறிப்புக்கள்.

| | |
|---|---|
| படகின் நீளம் | 13.5 மீற்றர் |
| படகின் குத்துயரம் | 1.0 மீற்றர் |
| படகின் அகலம் | 3.0 மீற்றர் |
| கபின் உயரம் | 2.25 ,, |
| கபின் அகலம் | 160 செ.மீற்றர் |
| படகின் வேகம் | 40 கடல்மைல் |

இப்படகில் 250 குதிரை வலுவுடைய இரண்டு இயந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.

இப்படகு ஒரு அடி ஆழத்திலும் மிதக்கக் கூடியதாகும்.

## படகிலிருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

(யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் வெற்றிகரமான மின்னல் வேகத் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப் படகிலிருந்து ஒரு தொகுதி ஆயுத தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

[4ஆம் பக்கம் பார்க்க]

## குடாக்கடலில் கடற்புலிகளின் 3வது வெற்றிகரமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாக் கடற் பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மூன்றாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும்.

கடந்த டிசம்பர் இருபத்தொன்பதாம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் சங்குப்பிட்டியிலிருந்து ஆனையிறவு நோக்கி ரோந்து சென்ற கடற்படையினரின் விசைப் படகுகள் கடற்புலிகளினால் வழி மறிக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலில் ஒரு படகு முற்றாக மூழ்கடிக்கப்பட்டதுடன் ஏழு கடற்படையினரும் கொல்லப்பட்டிருந்தனர்.

[4-ம் பக்கம் பார்கக]

# சிறில. கடற்படை அதிகாரிகளுக்கு அமெ.கடற்படையில் மேலதிகபயிற்சி

சிறிலங்கா கடற்படை அதிகாரிகளுக்கு விசேடமான மேலதிக பயிற்சிகள் அளிப்பதற்கு அமெரிக்க கடற்படை முன்வந்துள்ளது. இதற்காக கடலில் தரித்து நிற்கும் போர்க் கப்பல்களில் சிறிலங்கா கடற்படையினரை ஈடுபடுத்துவது பற்றி அமெரிக்காஆலோசித்து வருகிறது.

கடந்தமாதம் கொழும்புக்கு வருகை தந்த அமெரிக்க கடற்படையின் ஏழாவது பிரிவு கமாண்டர் வைஸ் அட்மிரல் திமோதி றைற்றுக்கும், சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சென்னை உயர் நீதிமன்றின் உத்தரவொன்றைத் தொடர்ந்து ஒருவார கால ... பாஸ்கரதாஸ் அறிவித்துள்ளார்.

## பரீட்சை விடைத்தாள்கள் எடுத்துச் செல்வதில் இழுபறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற பல பரீட்சைகளின் விடைத்தாள்களை திருத்த வேலைக்காக கொழும்புக்கு அனுப்பி வைப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

விடைத்தாள்கள் கப்பலில் அனுப்பிவைக்கப்படும் போது ஒரு அதிகாரிக்கு மட்டுமே அனுமதி கிடைத்திருக்கிறது. ஆனால் மேலதிகமாக மேலும் ஒருவர் செல்லவேண்டும் என்று யாழ். கல்வித்திணைக்களம் கருதுகிறது. இதற்கு அனுமதிபெற்றுத் தரும்படி பரீட்சை ஆணையாளரை யாழ். கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (க), (பா)

## ஐந்து இலட்சம் சிறுவர்கள் போரினால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போரினால் 4 லட்சத்து 87 ஆயிரம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் செப்டம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள தெற்காசிய சிறுவர் சம்பந்தமான மாநாட்டில் இந்த விடயம் குறித்து ஆராயப்படும் என தெரியவருகிறது.

தெற்காசியாவின் ஏழு அங்கத்துவ நாடுகளினதும் சிறுவர் நிலைபற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ள நிபுணர்களும் இம்மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

## பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்ணீர்மல்கி மாவீரருக்கு அஞ்சலி

மாதகல் பகுதியை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நேரடிச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் கேணல் ராஜன் உட்பட ஒன்பது வீரவேங்கைகளினதும் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்திக்கு பெருந்தொகையான மக்கள் திரண்டு கண்ணீர்மல்க மலரஞ்சலி செலுத்தினர்.

நேற்றுஇந்த அலங்காரஊர்தி தெய்வாம்சம் கொண்ட ஓர் உணர்வை ஊட்டியது குறிப்பிடத்தக்கது. புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட திரைச்சீலை மாவீரர்களின் உருவப்படங்களை துல்லியமாக எடுத்துக் காட்டின. மலர்மாலைகளாலும், மலர்வளையங்களாலும் ஊர்திகள் நிரம்பி வழிந்தன.

இந்த ஊர்தி கோண்டாவில், உரும்பராய், மருதனார்மடம், சுன்னாகம், சித்தன்கேணி, சண்டிலிப்பாய், மானிப்பாய், ஆனைக்கோட்டை. திருநெல்வேலிவீதிவழியாகஎடுத்துவரப்பட்டது. இதன்போது வீதிகளின் இருமருங்கிலும் வீட்டுவாசல்களிலும் திரண்ட மக்கள் வேங்கைகளின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சோதிடம்

ஜாதகம் எழுத, பலனறிய குழந்தைகளுக்கு அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, விவாகப் பொருத்தம்பார்க்க, உங்கள் எதிர்காலமறிய வேலணை சோதிடர் V. A. சிவராசா. 152B அரசடி றோட் கந்தர்மடம். (3099)

### எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரிப்பயிற்சி நூல் 'பொது விவேகப்பயிற்சிகள்' 10-09-92 இல் வெளிவருகின்றது. ஆக்கம்: க. குணராசா எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3087)

### முக்கிய அறிவித்தல்

நீங்கள் பழுது பார்ப்பதற்காகக் கொடுத்த உங்கள் பொருள்களை செப்ரெம்பர் மாதம் 30-ம் திகதிக்குள் எடுக்காவிடின் அப்பொருள்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பற்றுச் சீட்டு இல்லாமல் பொருள் பெற முடியாது. ஜீவிதா தொழில் நுட்பக்கூடம் ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். (சி/4955)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (சி-4963)

### ஸ்ரீ கருமாரி சோதிட நிலையம்

உங்களின், உங்கள் குழந்தைகளின் நிகழ்கால, எதிர்கால பலன்களை அறிய நாடுங்கள். அன்னை ஆதிசக்தி ஸ்ரீதேவி கருமாரியின் அருள் பெற்ற சோதிடர் அம்பிகைதாஸ் அவர்களை. தும்பளை மேற்கு (ஸ்ரீ சாரதா தேவி ஆச்சிரமத்திற்கு அருகில். தபால் பெட்டிச் சந்தி) பருத்தித்துறை (2895)

### தவறிவிட்டது

ஜெரோபாதினி( நுணாவில் மேற்கு சாவகச்சேரி)என்பவருடைய கைப்பை நல்லூர் நுணாவிலுக்கு இடையில் தவறிவிட்டது. அடையாள அட்டைகள் உட்பட சில முக்கிய பொருட்கள் அடங்கியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.


# அம்பாறையில் கடும் வரட்சி பலவித நோய்கள் பரவுகின்றன

அம்பாறை மாவட்டத்தில் என்றுமில்லாத வகையில் கடுமையான வரட்சி நிலவுகின்றது. வெப்பத்தின் கொடுமையினால் பல வகையான நோய்களும் மக்களிடம் வேகமாய்ப் பரவி வருகின்றன. சொறி, சிரங்குகள் மோசமாகப் பரவி வருகின்றன.

வரட்சியினால் மேட்டு நிலப் பயிர்கள்பாதிக்கப்பட்டுள்ளன. இதனை நம்பி வாழ்க்கை நடாத்தி வந்த விவசாயிகள் அவற்றைக் கைவிட்டுள்ளனர்.

மேலும் அக்கரைப் பற்று பகுதியில் உள்ள கிணறுகள் வற்றி விட்டதுடன் சில இடங்களில் மக்கள் தூர இடங்களுக்கும் சென்று தண்ணீர் பெற்றுவர வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

## காணாமல் போனோர் விபரம் பதிவு செய்து கொள்ளவும்

(சுன்னாகம்)

அண்மைய நாட்களில் நடந்த அனர்த்தங்களினால் வலி மேற்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து உடுவில்உதவி அரச அதிபர் பிரிவில் வீடுகளில் வசிப்போரும், உறவினர்களை இவ் அனர்த்தங்களின் போது இழந்தவர்களும், காணாமற் போனோர் பற்றிய விபரங்களையும் இன்று தொடக்கம் இணுவிலில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவை சங்க உடுவில் கிளையில் பதிவுசெய்து கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவை சங்க உடுவில் கிளை கேட்டுக்கொள்கிறது (11) (09)

### சமூகக் தரவும்

புதிதாகப்பட்டதாரிப்பயிலுநர் ஆசிரியர்களாக யாழ் மாவட்டத்திலும், வெளிமாவட்டத்திலும் நியமனம் பெற்றுள்ள சகலரையும் தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்-கல்வித்திணைக்கள வளாகத்தில் உள்ள நல்லூர் சாதனா பாடசாலையில் சந்திக்கவுள்ளனர். தயவு செய்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி பேரவையின் செயலாளர் வேண்டுகின்றார்.

## சீவல் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்புறுதி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சீவல் தொழிலாளர்களுக்கு விபத்து ஆயுள் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவர் க. நடராசா தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் உள்ள சகல தெங்குப் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் பத்து சீவல் தொழிலாளர் வரை விபத்து மரணம் அடைகின்றனர்.

இருபது பேர்வரை அங்கவீனமடைகின்றனர்.

சீவல் தொழிலாளர்களுக்கு நலன் தரும் இத் திட்டம் விரைவிலேயே நடைமுறைப் படுத்தப்படும் எனவும் தெரிய வருகிறது

# இந்திய வர்த்தகரிடம் 6.6 கிலோ தங்கம்

## புறக்கோட்டைப் பொலிசாரால் மீட்பு

[கொழும்பு]

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் 6.6 கிலோ எடையுள்ள 36 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரின் கொழும்பு புறக்கோட்டை அலுவலகத்திலேயே தங்கம் கைப்பற்றப்பட்டது. இந்நபர் கடுவலவில் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை வைத்துள்ளார் எனவும் தெரியவருகிறது. இவருக்கு ஒரு கோடியே 60 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## அடையாள வேலைநிறுத்தம் நான்கு லட்சம் பேர் பங்கு

[கொழும்பு]

- நடேசன்

சுமார் நான்கு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் ஐந்து பொதுக் கோரிக்கைகளுக்காக ஒன்றுபட்டு இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடாத்தியுள்ளனர் என கூட்டுக் கமிட்டியின் அமைப்பாளர் எஸ். நடேசன் தெரிவித்துள்ளார்.

இருபத்திரண்டு பாரிய கம்பெனிகள் அரசுக்குச் சொந்தமாயிருந்த தோட்டங்களைக் கையேற்ற பின் நடைபெற்ற முதல் அடையாள வேலை நிறுத்தம் இது. புதிய நிர்வாகங்களின் கெடுபிடிகளை எதிர்த்தும், தொழிலாளர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவுமே தோட்டத் தொழிற் சங்க கூட்டுக் கமிட்டி இவ் வேலை நிறுத்தத்தை நடாத்தியது.

அரசு தோட்டங்களைத் தனியாரிடம் ஒப்படைத்தது.

தோட்டங்களைப் பொறுப்பெடுத்த கம்பெனிகள், தொழிலாளர்கள் காலங் காலமாய் அனுபவித்து வந்த சலுகைகளை இடைநிறுத்தம் செய்தன. தாங்கள் விரும்பியவாறு வேலை நேரங்களை மாற்றியமைத்தன. அரைச் சம்பளம் போடுகின்றன. இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தி அரசு தொழிற்சங்கங்களுடன் ஒரு நியாயமான கூட்டு ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தியே


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா —1992

செப்டம்பர் 5-ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ் பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்புவிழாவிற்பங்குபற்றும் மாணவர்களுக்கான அங்கிகள் 2-9-92— 4-9-92 வரை, மு.ப 9.30 மணிமுதல் பி.ப 3.00மணி


திடீர் மரண விசாரணை

## 37 பெரிய ஆஸ்பத்திரிகளிலும் அதிகாரிகள் நியமனம்

நாட்டில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 37 பெரியாஸ்பத்திரிகளில் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்க நீதி உயர்கல்வி அமைச்சர் ஏ ஸீ எஸ், ஹமீத் தீர்மானித்துள்ளார்.

கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மன்னார், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, கண்டி, உட்பட பெரியாஸ்பத்திரிகளிலும், தள ஆஸ்பத்திரிகளிலும் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்.

இவ் ஆஸ்பத்திரிகளில் இறப்பவர்கள் சம்பந்தமான பிரேத பரிசோதனைகளைத் துரிதப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இப்பதவிக்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதம் 14 ஆம் திகதி வரை நீதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### விசேட பொதுக்கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளைத் தலைமையலுவலகம் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று யாழ் புனிதசாள்ஸ் மகா வித்தியாலயத்தில் முற்பகல் 9 30 மணியளவில் பிரிவுத் தலைவர் திரு க. வைத்தீஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது.

குடும்பப் பிரச்சினைக்கே

## தீர்வு காண முடியாதோர் நாட்டை வழிநடத்துவதா?

— அமைச்சர் ரணில் கேள்வி

[கொழும்பு]

சுதந்திரக் கட்சிக்குள்ளே பிளவு ஏற்பட்டிருக்கிறது கட்சியையே ஐக்கியமாக நடத்த முடியவில்லை. கட்சியை ஐக்கியமாக நடாத்த முடியாதவர்கள் நாட்டின் பிரச்சினைக்கா தீர்வு காணப்போகிறார்கள் என கேள்வி எழுப்பினார் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா.

கம்பிறுப்பிட்டிய உபாலி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே மேற்கண்டவாறு வினா எழுப்பினார்

அவர் தொடர்ந்து பேசுகையில்; இன்றைய அரசாங்கம் மக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்தாலும் எதிரணியினர் அரசாங்கத்தை கவிழ்க்கவே பல தந்திரங்களை மேற்கொள்கின்றனர். ஆனால் அவர்கள் கையாளும் தந்திரங்களை மக்கள் ஏற்கத்தயாராக இல்லை எனத் தெரிவித்த அவர்,

சிறிலங்காசுதந்திரக்கட்சி மூன்றாக பிரிந்து செயல்படுகிறது குடும்ப பிரச்சினைகளுக்கே தீர்வு காண முடியாதவர்கள் நாட்டின் பொதுப் பிரச்சினைகளுக்கா தீர்வு காணப்போகிறார்கள் எனக்கேள்வி எழுப்பினார்.

### சிரமதானம்

கொழும்புத்துறை மணிப்புரி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலயச் சுற்றாடல் பகுதிகள் ஆலய பரிபாலன சபையினராலும் மணிப்புரி இந்து இளைஞர் மன்றத்தினாலும் சிரமதான பணி மூலம் துப்பரவு செய்ய உள்ளதாக மன்றச் செயலர் ம. சுரேஸ்குமார் அறிவித்துள்ளார்-இச்சிரமதானப் பணியில் சகல மக்களையும் பங்குபற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

# ஜே. ஒ. சி. குண்டு வெடிப்பு: குற்றப்பத்திரம் தாக்கல்

[கொழும்பு]

கூட்டுப்படைத் தலைமையகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது சம்பந்தமான வழக்கில் ஆறு சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் கடந்த புதனன்று நீதிமன்றத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

இக்குற்றச்சாட்டுப் பத்திரங்களோடு முப்பத்துநான்கு தடயப் பொருள்கள் மற்றும் ஐம்பத்து மூன்று சாட்சிகளின் பெயர் விபரங்கள் என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன

இவ்வழக்கு அடுத்த மாதம் நான்காம் திகதி முதல் விசாரிக்கப்படவுள்ளது தெரிந்ததே.

### போர்க்கால நாட்டுக் கூத்து

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக தீவகப் பிரிவினரால் இன்றைய இராணுவ நடவடிக்கையை முறியடிப்பதற்கு மக்கள் அனைவரையும் அணிதிரள முன்வர வேண்டும் என்ற கருத்தில் அடங்க 'யுத்தமுனைக்கு செல்வோம்' என்ற போர்க்கால நாட்டுக் கூத்து வீதிகளில் பல பாகங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

### 11 ஆள் கொணர்வு மனுக்கள்

வழக்குகள் எதுவும் தாக்கல் செய்யப்படாமல் தடுப்புக் காவல் உத்தரவு அல்லது அவசர கால விதிகளின் கீழ் களுத்துறை, மகசீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பாக பதினொரு ஆட்கொணர்வு மனுக்கள், மேல்

### சிறப்புச்சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை, கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயத்தில் நாளை 11.00 மணிக்கு சதுர்த்தி உற்சவம் நடைபெற உள்ளது.

இந்த உற்சவத்தில் மாலை 6.00 மணிக்கு திரு. த. சிவகுமாரன் அவர்களும், திரு. திரு. இ. ஜெயராஜ் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்ற உள்ளனர்.


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
27 - 11 - 1949

இறப்பு
30 - 08 - 1989



உட்பட சில முக்கிய பொருட்கள் அடங்கியுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

[சி/4971]

ரத்தும், தொழிலாளர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவுமே தோட்டத் தொழிற் சங்க கூட்டுக் கமிட்டி இவ் வேலை நிறுத்தத்தை நடாத்தியது.

தொழிற் சங்கங்களுடன் ஒரு கலந்துரையாடலைக் கூட நடத்தாமல் தன்னிச்சையாய் றையெல்லாம் கட்டுப்படுத்தி அரசு தொழிற்சங்கங்களுடன் ஒரு நியாயமான கூட்டு ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தியே இவ் அடையாள வேலை நிறுத்தம் நடைபெற்றது.

University of Jaffna

## *TENDER NOTICE*

*Tenders are invited for the following from contractors registered for building works with University of Jaffna or ICTAD.*

*1. Improvements at Ramanathan Academy of Fine Arts- Construction of temporary class rooms (2no)*

*Tender forms can be Obtained form works Engineer, University of Jaffna from 7-9-1992 — 9-9-1992 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following:*

*Non - refundable deposit Rs. 250/-*
*Refundable deposit Rs. 2000/-*

*Perfected tenders should be sent to reach the Registrar University of Jaffna on or before 23-9-1992 at 10.00a.m.*

*Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.*

*Registrar,*
*University of Jaffna,*
*Thirunelvely,*
*Jaffna.*

(சி/4958)

## நன்றி நவிலல்



எம்மை எல்லாம் வாழ வழி வகுத்த பெருந்தகை நா. கந்தையா அவர்களின் மரண காலத்திலும், மரணச் சடங்கிலும், அந்தியேட்டிக் கிரியைகளிலும், சபிண்டீகரணம் முதலிய ஆன்மார்த்த வீட்டுக்கிரியைகளிலும் தெய்வீகப்பணி புரிந்த சைவக்குருமார் அவர்களுக்கும் உற்றார், உறவினர் உதவி செய்த யாவருக்கும், எம் உளங்கனிந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(சி 4950)

## நன்றி

16.08 92 இல் வவுனியா போராளிகளின் பரிசோதனை முகாமிற்கு அருகாமையில் என்னால் தவறவிடப்பட்ட எனது பிரயாணப் பையை எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவை நடத்துனர் திரு. என். நிமலன் தனது அயராத முயற்சியால் கண்டெடுத்து எனது வீட்டில் கொண்டு வந்து ஒப்படைத்துள்ளார். அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், வவுனியா போராளிகளின் பரிசோதனை நிலையத்தில் உள்ளவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. பெனடிக்ற்
11, பேக்கரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(சி/4966)

பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்புவிழாவிற்பங்குபற்றும் மாணவர்களுக்கான அங்கிகள் 2- 9- 92— 4- 9- 92 வரை, மு. ப 9.30 மணிமுதல் பி.ப 3.00மணி வரை கல்விக் கிளையில் வழங்கப்படும். நிழற்படத்திற்கான கட்டணமாக ரூபா 25/-ஐ சிறாப்பர் அலுவலகத்திற் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை மாணவர்கள் கொடுத்துத் தமது அங்கிகளைப் பெற்றுக்கொள்ளவும். அங்கியை பெறவரும் பொழுது மாணவ அடையாள அட்டையக் கொண்டு வருதல் வேண்டும்.

பதிவாளர்.

(சி/4965)

## ஏலவிற்பனை

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்/ பல்கலைக்கழக விவசாயப்பீடம் உற்பத்தி செய்த செத்தல் மிளகாய் 09- 09- 92 அன்று காலை 10 00 மணிக்கு கிளிநொச்சி விவசாய பீடத்தில்வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். வெற்றி பெறுபவர்கள் அதற்கான பணத்தைச் செலுத்தி அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். பார்வையிட விரும்புவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ்/பல்கலைக்கழகம்

(சி/4969)

சர கால விதிகளின் கீழ் களுத்துறை, மகசீன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பாக பதினொரு ஆட்கொணர்வு மனுக்கள், மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### இலட்சார்ச்சனை

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய இலட்சார்ச்சனைப் பெருவிழா இன்று காலை 4 30 மணியளவில் பூசையுடன் ஆரம்பமாகி 7.00 மணியளவில் இலட்சார்ச்சனை விசேட ஹோம சமர்ப்பணம் இடம்பெறும்.

### விசேட அபிஷேகம்

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ க. சிவசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில், விசேட அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெற உள்ளன.

### இலவச ஆங்கில வகுப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரிப் பகுதியில் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றதாகத் தெரியவருகிறது.

சாவகச்சேரி லியோகழகத்தினரால் நடத்தப்பட்டு வரும் இவ் இலவச வகுப்புகள் சங்கத்தானை யூப்பிட்டர்கல்விநிலையத்தில் நடைபெறுகிறது-

(35)

### ஆவணிச்சதுர்த்தி அபிஷேகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய ஆவணிச் சதுர்த்தி அபிஷேகமும் சித்திரத்தேர் பவளக்கால் நாட்டு வைபவமும் எதிர்வரும் திங்கட் கிழமை காலை ஒன்பது மணிக்கு இடம்பெறும். பவளக்காலை யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. இ. முருகையன் நிறுத்தி வைப்பார்.

(35)

இறப்பு
30 - 08 - 1989



## திருச்செல்வம் (சிவதாஸ்) துரை

(இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட புலிகள் இயக்க ஆதரவாளர்)

மூன்றாண்டு போனதடா!
இன்னமும் உன் நினைவு
இதயத்தில் கனக்கின்றது - நீ
சிந்திய குருதி சேறாகி
இந்திய இராணுவம் புதையுண்டுபோனது
முந்தி விடுதலைக் குரலெழுப்ப
உன் பாதையில் நாமும்

தொண்டமானாறு (3101) குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்..

## 1992 - 08 - 30

1989 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை/ கல்முனை, நற்பிட்டிமுனைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ஜெயம்** (கிருஸ்ணபிள்ளை ஜீவரத்தினம் - வீரமுனை, சம்மாந்துறை, மட்டக்களப்பு)

கோண்டாவிலில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**நீக்ரோ** (சபாரத்தினம் - செட்டிகுளம்)

மாவிட்டபுரத்தில் இந்தியப் 'பரா' அதிரடிப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நெடுமாறன்** (வைத்திலிங்கம் கணேசநாதன் - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - வந்தாறுமூலை பல்கலைக் கழக இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து முஸ்லிம் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண் - ஐயங்கேணிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதியர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4960)

சிந் னைக்கு

சுதந்திரம் என் தே அவர்கள் போர்க்குரல்,
சுதந்திரம் இல் லயேல் செத்துமடிய உரிமை.
— ஜி. எச். போக்கர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## கடலிலும் எதிரியை உலாவர விடோம்

மின்னல் வேக அதிரடித் தாக்குதல் ஒன்றின் மூலம், சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான நவீன அதிவேக விசைப்படகு ஒன்றை விடுதலைப் புலிகள்கைப்பற்றியுள்ளமை அண்மைக் காலத்தில் கடற்புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் ஒன்று என்பது மட்டுமல்ல, சாதனைக்குரிய ஒன்றும் ஆகும்.

உலகிலுள்ள விடுதலை அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் போன்று மிகக் குறைந்த வளங்களுடன் பெரும் சாதனைகளைவேறு அமைப்புக்கள் எவையும் இதுவரை படைத்ததாக இல்லை. உலகின் கெடுபிடியுத்தம் நிலவிய காலத்திலும் சரி, தற்பொழுது, உலகிற்கு புதிய அரசியல் ஒழுங்கொன்றை அமெரிக்கா உருவாக்க முனைந்துள்ள இன்றைய காலகட்டத்திலும் சரி, எந்த நாடுகளினதோ அன்றி, அமைப்புக்களினதோ உதவிகள் எதுவுமின்றி ஆச்சரியப்படத்தக்க வகையில் வெற்றிகரமாக தமிழ் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை விடுதலைப்புலிகள் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

1983 இல் கண்ணி வெடித்தாக்குதலுடன் முனைப்படைந்த ஆயுதப் போராட்டம், இலங்கையின் ஒரு பகுதியில் தரைக்கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகள் வைத்திருக்கும் நிலைவரை விருத்தியடைந்தது. இதற்காக பிராந்திய வல்லரசு ஒன்றுடனும் மோதவேண்டிய நிலை உருவாகியது. 1990 யூலையில், இருந்து இன்றுவரை சுமார் இருபத்தி ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் சிங்களஅரச இராணுவத்தால் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை அதாவது சிங்கள அரசாங்கத்தால் வெற்றி பெறமுடியவில்லை. இதேவேளை, புலிகளை வெளியேற்றியதாகக் கூறப்படும் பகுதிகளிலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஊர்காவற்றுறைப் பகுதியில், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல்

# இலங்கை அரசிற்கு உதவ ராணுவம் அனுப்பியது தவறு

## தென்னாசிய கொள்கை குறித்து

## முன்னாள் இந்திய வெளிவிவகார செயலாளர்

இலங்கைக்கு உதவி செய்வதற்காக, இராணுவத்தை அங்கு அனுப்பியது தவறு என்று தான் கருதுவதாக, இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரும் சர்வதேச விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவருமான மகாராஜ் கிருஸ்ண ராஸ்கோத்ரா (67) தெரிவித்துள்ளார்.

இவர் இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்தில் வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்

1982 தொடக்கம் 1985 வரை இவர் இப்பதவியை வகித்தார். பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து, மொரோக்கோ, ரியூனிசியா, நேபாளம் ஆகிய நாடுகளிலும் இராஜதந்திரப் பதவிகளை வகித்துள்ளார்.

இந்தியாவின் உடனடி அண்டை நாடுகளுடன் அது கொண்டுள்ள உறவு நிலை எவ்வாறுள்ளது என்ற கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இப் பேட்டி இந்தியாவின் பிரபலமான இந்துப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

இந்தியா பல அண்டை நாடுகளைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் சுதந்திர நாடுகள். இந்நாடுகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக சாத்தியமான அனைத்தையும் இந்தியா செய்துள்ளது. எனவே நாம் எமது அண்டை நாடுகளைத் தவறாக நடத்துகிறோம் என்று எவரும் கூற முடியாது

எமக்குப் பாகிஸ்தானுடன் ஒரு பிரச்சினை உள்ளது. இதைத்தவிரஏனையஅண்டை நாடுகளுடன் எமதுஉறவுசிறப்பானதாக உள்ள போதும் இலங்கைக்கு உதவி செய்வதற்காக அந்நாட்டிற்கு இராணுவ ரீதியாகச் சென்றது ஒரு தவறான செயல் என்றே நான் நினைக்கிறேன்.

ஆனால், அதற்கு முன்னர் எமது உறவுகள் நன்றாகத் தான் இருந்துள்ளன இந்த மூன்று வருட காலத்தையும் நாம் கருத்தில் எடுக்காமல்விட்டால், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள்சிறப்பாகவேஉள்ளன எனத் தெரிவித்தார்.

அடுத்து சீன இந்திய உறவுகள் தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில், சீனாவுடன் இந்தியாவிற்கு ஒரு எல்லைப்பிரச்சினைஉள்ளது. இது சீனாவினால் தான் உருவாக்கப்பட்டது-

அவர்களிடமும் சில உரிமைக்கோரிக்கைகள் உள்ளன. எம்மிடமும் சில உரிமைக் கோரிக்கைகள்உள்ளன. இவை அனைத்திற்கும் உள்ள தீர்வு இவை தொடர்பாக இரு தரப்பும் பேச்சுவார்த்தையில்இறங்குவதுதான்- மேலும் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு நிலை மேம்பாடடைந்து வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து பாகிஸ்தான் இந்திய உறவு நிலை பற்றி கருத்து வெளியிடுகையில் இது ஏனைய நாட்டு விடயங்களில் இருந்து வேறானது- பல வருடங்களாக பாகிஸ்தான் பஞ்சாப்பின் தீவிர வாதிகளுக்கு ஆயுதம் வழங்கி வருகிறது. பாகிஸ்தானிடம் ஒரு திட்டம் இருந்தது நான் வெளியுறவுச் செயலாளர் என்ற வகையில் 1982இல் பேச்சுவார்த்தை நடாத்த பாகிஸ்தான் சென்றிருந்த போது அதை அவதானித்தேன். இவ் வாறானதொரு சிந்தனை அப்போது நிச்சய மற்ற தொன்றாகவே இருந்திருக்கலாம். பஞ்சாப்பில், முதலில் பிரச்சினையைத் தூண்டுவதாகவும் பின்னர் காஷ்மீரில் சில பிரச்சினைகளைத் தூண்டுவதாயும் அது இருந்திருக்கலாம்,

இது ஒரு பிழையான கொள்கை என்றே நான் நினைக்கிறேன், பாகிஸ்தான் இந்தியாவுடன் ஒரு யுத்தத்தில் ஈடுபட முடியாத நிலையிலேயே உள்ளது. ஆனால் அது இப்போதும்யுத்தமொன்றிற்கு தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இப்போது, அயோத்தி விவகாரத்திலும் பாகிஸ்தான் தலையிடுகிறது. அவர்கள்தாம் முஸ்லிம்களின் காவலர்கள் என்று நினைக்கின்றார்கள். ஆனால் பாகிஸ்தானை விட இந்தியாவில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

இவர்களுக்காக பாகிஸ்தான் எதுவும் செய்துவிட முடியாது. இவர்களது விடயத்தில் இந்தியாதான் எதனையாவது செய்ய முடியும். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்கு நாட்டின் ஏனைய மக்களுக்கு உள்ள சகல உரிமைகளும் உண்டு எனவும் தெரிவித்தார்-

போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில் இந்தியாவின் நிலைமை என்ன என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் நேருவினுடைய காலத்தில் இந்தியா ஒரு சக்திவாய்ந்த நாடாக இருக்கவில்லை- ஆனால், அதற்கு அப்போது ஒரு முக்கியத்துவமும், மதிப்பும் இருந்தது- காந்தியின் சுதந்திரப் போராட்டமும். நேருவுமே இதற்குக் காரணமாகும்-

ஆனால் இன்று அதிகாரத்திற்கும், பொருளாதார பலத்திற்கும், செல்வத்திற்குமே உலகம் மதிப்புக்கொடுக்கிறது. நாமும் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ள முயலவேண்டும்- இருந்தபோதும் உலகில் இந்தியாவிற்கு ஒரு இடம் இருக்கிறது- இன்றைய அதன் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வேறு எவராலும் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாதுஎனத்தெரிவித்தார்

# பங்கு சந்தை ஊழல் மோசடி; நரசிம்மராவின் மகனுக்கு பங்கு?

இந்திய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள பங்குச் சந்தை ஊழல் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவின் மகன் தொடர்பு பட்டுள்ளார் என இந்தியப் பத்திரிகைகள்செய்தி வெளியிட்டுள்ளன.

இது இந்தியாவின் சரித்திரத்திலேயே மிகப் பெரிய ஊழல் மோசடியாக கருதப்படுவது தெரிந்ததே. பங்குச் சந்தை ஊழல் மோசடியில் பல ஆயிரம் கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் நிதித் திட்ட முறைகளையே ஆட்டம் காண வைத்துள்ள இம் மோசடி தொடர்பாக பம்பாய் பங்குச் சநதை வர்த்தகப் பிரமுகரான ஹர்சத் மேத்தா உட்பட பல வங்கிகளின் முகாமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

இந்த ஊழல்மோசடியில்பிரதமர் நரசிம்மராவின் மகன் ராஜேஸ்வர ராவ் தொடர்புபட்டிருப்பதாய்த் தெரியவந்ததில் இருந்து ஊழல் குறித்து விசாரணை மேற் கொண்டு வந்த சி. பி. ஐ(மத்திய புலனாய்வுப்பிரிவு) இணை இயக்குனர் திரு. கே. மாதவன் திடீரெனப் பதவி விலகினார்.

திரு. மாதவன் 'போபர்ஸ்' ஊழல் தொடர்பாகவும் விசாரணை நடாத்தியவராவார், திறமை மிக்கவர், எதிலும் கவனத்துடன் செயற்படுபவர் எனவும் இவர் பெயர் பெற்றுள்ளார். தனது தொலைபேசி உரையாடல்களைக் கூட இவர் முன் எச்சரிக்கையுடன் ஒலிப்பதிவு செய்து கொள்ளும் வழக்கமுடையவர்.

மாதவன் ராஜினாமாச் செய்யவேண்டுமென, பிரதமரின் தலைமைச் செயலாளராகவுள்ள ஏ. என். வர்மாவே வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது.

பம்பாயில் இருந்த மாதவனுக்கு கடந்த யூலை 19-ம் திகதி டில்லிக்கு வரும்படி திடீர் உத்தரவொன்று அனுப்பப்பட்டது. டில்லிவிரைந்த மாதவன், மறுநாள் பிரதமரின் செயலாளர் வர்மாவைச் சந்தித்தார் இருவரும் 'இரகசிய ஆலோசனை' நடத்தியபின் அங்கிருந்து மாதவன் வெளியேறினார்- அன்று மாலையே 'முற் கூட்டியே ஓய்வு' பெறுவதற்கான தனது கடிதத்தை சி.பி.ஐ. இயக்குனர் திரு.எஸ் கே, தத்தாவுக்கு மாதவன் அனுப்பினார். அது மூன்றுவரிகளை மட்டுமே கொண்டதாய் இருந்தது. அக்கடிதத்தில் போதிய விளக்கமில்லாததால், விரிவான ஒரு கடிதத்தை அனுப்பும்படி சி பி.ஐ.இயதகுனர் கேட்டார். ஆனால், மாதவன் அதற்கு மறுத்து விட்டார்-

எனினும் மாதவனின் ராஜினாமா கடிதம் ஏற்கப்பட்டது. அவருடைய பணியில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். பங்குச் சந்தை ஊழல்தொடர்பான விசாரணையின் போது இவரும் சாட்சியம் அளிப்பாரா என்ற கேள்வியும் இப்போது எழுந்துள்ளது.

இதே சமயம் இந்தியாவின் மற்றொரு உளவுப் பிரிவான ஐ.பி(இன்ரெலிஜன்ஸ் பிரோ) என்ற அமைப்பு மாதவன் மீது தீவிர கண்காணிப்பைச் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இதே சமயம் நரசிம்மராவின் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளதையும், அமைச்சர் ப. சிதம்பரம் பதவியை இராஜினாமாச் செய்துள்ளமையும் தெரிந்ததே.

## தமிழகத்தில் பரவலாக எதிர்கட்சித் தொண்டர்கைது

(சென்னை)

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சியைச் சேர்

பின்னர் செய்தியாளரிடம் பேசிய மு கருணாநிதி, தி. மு. கழகத் தலைமைச் செய

# ராஜீவ் - பெனாசீர் பூட்டோ; இரகசியப் பேச்சுவார்த்தை

கள அரசாங்கத்தால் வெற்றி பெறமுடியவில்லை. இதேவேளை, புலிகளை வெளியேற்றியதாகக் கூறப்படும் பகுதிகளிலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஊர்காவற்றுறைப் பகுதியில், லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரெட்னா உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்பட்டமை இதற்குச் சான்றுபகரக்கூடியதாகும்.

இதேவேளை இக்கால இடைவெளியில் போர் தரையில் மட்டுமல்ல கடற்பரப்பிற்கும் வியாபித்தது. 1983ஆம் ஆண்டு கண்ணிவெடித் தாக்குதல் மூலம், தமிழர் தாயகத்தில் சிங்கள இராணுவம் நிம்மதியாக உலாவர முடியாது என்பது எவ்வாறு உணர்த்தப்பட்டதோ அதேபோன்று, கடற்பரப்பிலும், சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் நிம்மதியாக உலாவரமுடியாது என்பது கடற்புலிகளால் அண்மைக் காலமாக உணர்த்தப்பட்டு வருகின்றது.

இன்று கடற்பரப்பில், கண்ணிவெடித் தாக்குதலில், இருந்து வழிமடக்கித்தாக்குதல் தளங்களுக்குள் ஊடுருவித் தாக்குதல் என்பனவரை செய்யக்கூடிய நிலைவரை கடற்புலிகள் வளர்ந்துள்ளனர். நேற்று அதிகாலை, மண்டைதீவு தளத்திலிருந்து நவீனவிசைப் படகு ஒன்றைப் புலிகள் கைப்பற்றியுள்ளமை இதனையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.

தமிழீழத்தின் பெரும்பகுதியில் தரைக்கட்டுப்பாட்டை இழந்துள்ள சிறிலங்கா ஆயுதப்படையினருக்குக் கடற்புலிகளின் இவ்வளர்ச்சி பெரும் அபாய அறிவிப்பாகும். அண்மைக் காலத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் புலிகள் மேற்கொள்ளும் கடல்வழிப் பயணங்களையும், புலிகளுக்கு வெளியிலிருந்து கிடைக்கும் கடல்வழி ஆயுத விநியோகத்தையும் கட்டுப்படுத்துவதே தமிழீழப் போராட்டத்தைத் தோற்கடிக்க ஒரேவழி என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செயற்பட்டுவரும் நிலையில், புலிகள் கடற்படையினர் மீது மேற்கொள்ளும் இத்தாக்குதல், அவர்களின் திட்டங்களுக்கு பெரும் சவாலாக அமையும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை-

இதேவேளை விடுதலைப் புலிகளின் வளர்ச்சியையோ, அன்றி அத்துடன் இணைந்த தமிழ்தேசிய இனப்போராட்டத்தின் வளர்ச்சியையோ சிங்கள ஆயுதப்படையால் அடக்கிவிட முடியாது என்பதற்கும் இது சான்று பகர்வதாக உள்ளது.

## எதிர்கட்சித் தொண்டர்கைது

(சென்னை)

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களும், நிர்வாகிகளும் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்படுகிறார்கள் என்று இக்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

சிறி ராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியை அரசு மீண்டும் பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அடுத்த மாதம் முதலாம் திகதி மறியல் போராட்டம் நடத்த இக்கட்சிகள் திட்டமிட்டிருப்பதைத் தொடர்ந்தே இக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி, மாச்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நல்லசிவம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ப மாணிச்கம் உட்பட பல கட்சித் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளரிடம் பேசிய மு கருணாநிதி, தி. மு. கழகத் தலைமைச் செயலர் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன் உட்படப் பல முன்னணித்தலைவர்கள்கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் தனது கட்சியையும் மற்றும் நேசக்கட்சிகளையும் சேர்ந்த சுமார் பத்தாயிரம் தொண்டர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கருணாநிதி மீது விசாரணை

## எதிர்க்கட்சி தலைவர்கள் பலர் கண்டனம்

அரசியல் காழ்ப் புணர்ச்சி காரணமாகத் தி மு. க. தலைவர் மு கருணாநிதிமீது விசாரணைக்குழு அமைக்கப்பட்டதற்காக மேற்கு வங்காள முன்னாள் அமைச்சரும் அகில இந்திய போர்வேட் கட்சித் தலைவருமான நிர்மல்போஸ் குறை கூறினார்

ஊழல் அதிகாரதுஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிமீது ஒரு நபர் விசாரணைக்குழு அமைக்கப்படிருப்பதற்கு தேசிய முன்னணியின் தலைவரான என் டி. ராமராவ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை இது என இந்திய கம்யூனிஸ்ட்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பாரதீய ஜனதாக் கட்சி அகில இந்தியதுணைத் தலைவர் ஆஸா கிருஷ்ணமூர்த்தி வெளியிட்ட அறிக்கையில், தமிழ் நாட்டின் அரசின் நிலை தெளிவற்றதாக உள்ளது என்று குறை கூறியுள்ளார்.

கருணாநிதி மீது ஜெயலலிதா அரசு விசாரணைக் குழு அமைத்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது. எதிர்க் கட்சிகளை ஒடுக்கும் நோக்கமுள்ளது என்று தமிழக ஜனதாக் கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் ஒரு அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தென்ன ஆபிரிக்காவில் எண்மரை

## சுட்டுக் கொன்ற பொலிஸ் தானும்தற்கொலை செய்தார்

பாலியல் வன்முறை சம்பந்தமாக விசாரணை ஒன்றை எதிர்நோக்கியிருந்த தென்னாபிரிக்க கறுப்பு இன பொலிஸ்காரர் ஒருவர் எட்டுப் பேர்களைச் சுட்டுக் கொன்றார், பின்னர் தன்னையும் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஒரு சக பொலிஸ்காரரின் புதல்வியைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக இப்பொலிஸ்காரர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நான்கு கறுப்பு இனப் பொலிஸ்காரர்களையும், இரு இளம் பெண்களையும், நான்கு வயதுப் பெண் குழந்தை ஒன்றையும், பொலிஸ் நிலையக் கமாண்டரான வெள்ளையருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தில் இருபொலிசாருப், ஒரு பெண் சிறைஅதிகாரியும், எட்டு வயதுப்பெண் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தனர்.

## சாட்சிகளுக்கு பலத்த பாதுகாப்பு

(சென்னை)

செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ராஜீவ் கொலை வழக்கு சம்பந்தமான சாட்சியங்களின் ரகசியங்களை காப்பாற்ற அவர்களுக்கு தனியாக நம்பர் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## உன்னத மனிதர்

(சென்னை)

ராஜீவ் காந்தி பெயரிலான உன்னத மனிதருக்கான விருது தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங்கிற்குவழங்கப்பட்டது.

# ராஜீவ் - பெனாசிர் பூட்டோ; இரகசியப் பேச்சுவார்த்தை

பாக். புலனாய்வுத் துறையிடம் ஒலிப்பதிவு நாடா

1988-ல், முன்னாள் இந்தியப் பிரதமரான ராஜீவ் காந்திக்கும், பாகிஸ்தானின் பிரதமராய் இருந்த பெனாசீர் பூட்டோவிற்கும் இடையே நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தையொன்றின் ஒலிப் பதிவு நாடாவொன்று தம்மிடம் உள்ளதாக பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவான ஐ. எஸ். ஐ. தெரிவித்துள்ளது. மேலும் இவ் ஒலிப்பதிவு நாடாவில் உள்ள விடயங்களை பொதுமக்களுக்கு வெளியிடுவதற்கான அனுமதியை அது பாகிஸ்தான் அரசிடம் கோரியுள்ளது.

பெனாசீர் பூட்டோ பதவியில் இருந்தபோது அவருக்கெதிரான பாகிஸ்தானின் தற்போதைய ஆட்சியாளர்களும்பாகிஸ்தான்புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட சதி முயற்சிகளை அம்பலப்படுத்தும் ஒலிப்பதிவு நாடாவொன்றை பெனாசிரின் வெகுசனத் தொடர்பு அதிகாரி அண்மையில் வெளியிட்டிருந்தார்.

உண்மையில் ஒலிப்பதிவு நாடாவை வெளியிடும் நோக்கம் புலனாய்வுப் பிரிவினருக்கு இருக்காது எனவும், பெனாசீரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டே இத்தகையதொரு அறிவிப்பை அவர்கள் விடுத்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

ஆனாலும் பெனாசீர் பூட்டோ பதவியில் இருந்தபோது அவருக்கும் இராணுவம் மற்றும் புலனாய்வுத் துறைக்கும் நிலவிய முரண்பாடுகளையே இந்த ஒலிப் பதிவு நாடா விவகாரம் எடுத்துக் காட்டுகின்றது. ஏனெனில் இவ்வாறான ஒரு முரண்பாடு இல்லாவிட்டால் பெனாசீரிற்குத் தெரியாமலே அவருடைய பேச்சுவார்த்தையின் விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் இரகசியமாக ஒலிப்பதிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

பாக். சட்டப் பேரவை தீர்மானம்

## உள் விவகார தலையீடென இந்தியா நிராகரிப்பு

(டில்லி)

ராம ஜன்மபூமி-பாபர்மசூதி பிரச்சினை பற்றி பாகிஸ்தான் தேசிய சட்டப் பேரவை இயற்றியுள்ள தீர்மானத்தை இந்தியா நிராகரித்து விட்டுள்ளது.

இது விடயமாக இந்தியாவின் வெளியுறவுச் செயலகம் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் பாகிஸ்தான் அப்பட்டமாகத் தலையிடுவதை எடுத்துக் காட்டுவதாகவும், இத்தகைய போக்குமுற்றிலும் ஏற்கப்பட முடியாது என்றும் கூறியுள்ளது.

## ஆப்கான் அகதிகளுக்கு பாக். கதவடைப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானிலிருந்து அகதிகள் பாகிஸ்தான் வருவதை தடுக்கும் முகமாக பாகிஸ்தான் தனது எல்லைப்புறங்களை மூடியுள்ளது.


சண்டை நடைபெறும் காபூலில் இருந்து ஏறத்தாழ நாற்பதாயிரம் பேர் பாகிஸ்தானுக்குள் தப்பியோடி வந்திருப்பதாகவும், மேலும் வருவதை தடுக்கும் முகமாகவே எல்லைகள் மூடப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

ஆப்கானிஸ்தானிலிருந்து இனிமேல் பாகிஸ்தான் வருவோர் பாஸ்போர்ட், மற்றும் விசா வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்டுகள் என்று தெரியவருகிறது

ஈழநாதம்

### உதவிப்பணம்

யாழ். பல்கலைக் கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான 'பேர்சறி' உதவிப்பணக் கொடுப்பனவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (01-09-92) காலை 9 மணிக்கு வழங்கப்படுமென நிதிப்பிரிவு அறிவித்துள்ளது. (05)



கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகின் முழுத் தோற்றம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# புலிகள் தாக்கலாம் என அச்சம்; சிறைக்கு பலத்த பாதுகாப்பு

ராஜீவ் கொலைக்கு வழக்சம்பந்தமாக சாட்சியங்களின் இரகசியம் காக்க அவர்களுக்கு இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன, என தெரியவருகிறது.

நளினி, முருகன் உட்பட 26 பேர் சிறை வைக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு சப் - ஜெயிலில் கைதிகள் தப்பாமல் இருக்க, மிகப் பிரமாண்டமான முறையில் 80 அடி நீளமும் 200 அடி அகலமும் உள்ள குண்டு துளைக்காத இரும்பு மற்றும் தகடுகளால் ஜெயிலின் பின்புற மதில்சுவர் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கொலை வழக்குத் தொடர்பாக நளினி, முருகன் உட்பட 21 பேரை சி. பி, ஐ பொலிசார் கைது செய்து செங்கல்பட்டு ஜெயிலில் தடா கைதிகளாக அடைத்துள்ளளர்

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலைச் சமாளிக்கும் பொருட்டு, ஏற்கனவே செங்கல்பட்டு சப் ஜெயிலில் மதிற் சுவர்கள் மேலும் 6 அடி உயரத்திற்கு உயர்த்திக் கட்டப்பட்டன. அந்தச் சுவரின் மீது முதற்றடவையாக இரும்பு மற்றும் தகடுகளால் செய்யப்பட்ட குண்டு துளைக்காத இராட்சத கட்அவுட் அமைக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அனைத்து மதிற் சுவர்களிலும் இவ் ஏற்பாடு செய்யப்படும் எனத்தெரியவருகிறது.

செங்கல்பட்டு நகரப்பொலிசாரும் இரவு ரோந்து செய்து வருகின்றார்கள். இரவுநேர பாதுகாப்பு ஜெயிலில் பலப்படுத்தப்பட்டுள்ளது- மிகப்பெரிய அளவிலான சோடியம் பல்புகள் பொருத்தப்பட்டு இரவு, பகல் போல காட்சியளிக்கின்றது- மற்றும் மின்சாரம்தடைப்பட்டால் உடனே இயக்கக் கூடியதாய் இரண்டு ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன-

மற்றும் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ள புலிகளுக்கு எந்நேரமும் ஆபத்து வரலாம் என்பதால் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை செங்கல் பட்டு சப் ஜெயிலிலேயே நடைபெற்று வருகிறது

15 நாட்களுக்கு ஒருமுறை நீதிபதி சித்திக், நீதிபதி சவுந்தர பாண்டியன் இருவரும் செங்கல்பட்டு சப் ஜெயிலுக்கு வந்து விசாரணை செய்து வருகின்றனர்.

கடந்த 12ஆம் திகதி, ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்வதற்காக எஸ். எம் சித்திக் செங்கல் பட்டு சப் ஜெயிலுக்கு வந்திருந்தார் வழக்கில் சம்பந்தப்பட்ட 26 பேரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவருக்கும் குற்றப் பத்திரிகையின் நகல் ஏற்கனவே பகுதி பகுதியாக நான்கு தடவை கொடுக்கப்பட்டுள்ளது

அனைத்து குற்றவாளிகளுக்கும் குற்றப் பத்திரிகையின் நகல் கொடுக்கப்பட்டு விட்டதால் இனி சாட்சிகள் விசாரிக்கப்படுவர்.

அநேகமாக செங்கல்பட்டு அல்லது பூந்தமல்லி சப் ஜெயிலிலேயே விசாரணைகள் நடைபெறும் என தெரிய வருகிறது

விசாரிக்கப்படும் போது சாட்சிகள் பெயர் சொல். அழைக்கப்பட மாட்டார்கள் இலக்கத்தைக் குறிப்பிட்டே அழைக்கப்படுவர் சாட்சிகளின் பெயர்களை மிக இரகசியமாய் பேணுவதற்கே இவ் ஏற்பாடெனத் தெரியவருகிறது

## ஜெயலலிதா மீதான ஊழல்; வழக்கு தொடர அனுமதிக்குக

**- கருணாநிதி**

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதா மீது பல ஊழல் புகார்களைக் கூறியிருக்கிறேன். அவற்றின் அடிப்படையில் கிரிமினல் வழக்குத் தொடர அனுமதி தர வேண்டும் அப்படித் தந்தாலோ அல்லது நான் கூறிய ஊழல் புகார்களுக்காக ஜெயலலிதா என்மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தாலோ நான் கூறியவற்றை நிரூபிக்கத்தயாராக இருக்கிறேன் என்று மு. கருணாநிதி கூறினார்.

என் மீதும், என் குடும்பத்தினர் மீதும் புகார்களை ஜோடித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக்குழுவைச் சந்திப்போம். அதன் நடவடிக்கைகளைப் புறக்கணிக்க மாட்டோம் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி நிருபர்களிடம் கூறினார்.

விசாரணைக் குழுவை எந்த செயற்குழு இம்மாதம் கூடுகிறது என்று மு.கருணாநிதியும் உடனிருந்த பொதுச் செயலாளர் அன்பழகனும் சொன்னார்கள்

அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளரிடம் மு கருணாநிதி பேசும்போது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், பழி வாங்கும்நோக்கிலும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுளளது. ஆணைக்குழு விசாரணையைப் புறக்கணித்து விட மாட்டோம். ஒன்றை மறந்து விடக்கூடாது. சரித்திரம் மாறும். அது விரைவில் மாறும். பொறுத்திருந்து பாருங்கள் என்று கூறினார்

பத்மநாபா கொலை வழக்கு;

## அரச தோட்டத்தில் நடத்த தமிழக அரசு ஆலோசனை

(சென்னை)

பத்மநாபாகொலைவழக்கை சென்னை அரச தோட்டம் கூவம் இல்லத்தில் நடத்துவது குறித்து தமிழ் நாடு அரசு பரிசீலித்து வருகிறது எனத்தெரிவிக்கப்படுகிறது.

பத்மநாபா வழக்கில் குற்றப் ... மன்றத்தில் நடத்தும் படிகேட்டுக் கொண்டுள்ளது.

தடா சட்டத்தின் கீழ் தொடரப்பட்டிருக்கும் இந்த வழக்கை இரகசியமாகவே நடத்தப் பொலிஸார் விரும்புகின்றனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### சிறிலங்கா

லங்கா கடற்படையின்அதிகாரி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவுக்கும் இடையிலான பேச்சுக்களில் இவ்விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சிறிலங்காவின் கடற்படைஅதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பயிற்சி பெற்றுவருவது தெரிந்ததே.

இவ்விசேடபயிற்சித் திட்டத்தின்படி சிறிலங்காவிற்கூடாக பயணம் செய்யும் அமெரிக்கப் போர்க்கப்பல்களில் சிறிலங்காவின் கடற்படை அதிகாரிகள்

## அவ்ரோ நோட்டம்

(யாழ்ப்பாணம்)

அவ்ரோ விமானம் ஒன்று நேற்று யாழ் நகரின் கரையோரப் பகுதிகளை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது

நேற்றுக்காலை11மணியளவிலும் மாலை 4.30 மணியளவிலும் மேற்படி விமானம்வட்டமிட்டு நோட்டமிட்டதை காணக்கூடியதாக இருந்தது. இதனை அடுத்து கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் சிலர் பயப்பீதி காரணமாக பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர் (ப..) (21)

### இலக்கிய [illegible]ரை

(குருநகர்)

யாழ் பிரதான வீதி திருமறைக் கலா மன்றக் கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்கு இலக்கிய அவைக் கருத்தரங்கு நடைபெறும்.

கலாநிதி காரை செ சுந்தரம்பிள்ளை 'பாரதி கண்ட பாஞ்சாலி'' என்னும் தலைப்பில் இலக்கிய உரை நிகழ்த்துவார். (21)

### மூன்றாம் தவணை ஆரம்பம்

யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளும் நாளை ஆரம்பிக்கப்படும் என யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இடங்களில் இயங்கமுடியும் என எதிர்பார்க்கப்படும் பாடசாலைகள் வழமைபோல் இயங்கும் எனவும் மேலும் இயங்க முடியாது என எதிர்பார்க்கப்படுகின்ற பாடசாலைகளை வேறு இடங்களில் நடத்துவதற்கு யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கைஎடுத்துள்ளது

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம நேசரத்தினம்

காரைநகர். களபூமி. சந்திரந்தை ப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சாவகச்சேரி கச்சாய் வீதியில் வசிப்பவருமாகிய திருமதி சுப்பிரமணியம் நேசரததினம் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சண்முகம் சுப்பிரமணியத்தின் (விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் ஆலி-லை) அன்பு மனைவியும். செல்வரத்ணம் [illegible] ரராசசிங்கம், இராசகுமாரன் (சாவகச்சேரி ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம்), சுந்தரலிங்கம் (ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி), கோமதி, ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற [illegible]னாசித்தம்பி கந்தையா (இளைப்பாறிய [illegible] நிலைய அதிபர்), வினாசித்தம்பி [illegible] வைத்திலிங்கம் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், ஆறுமுகம் சரஸ்வதி, வினாசித்தம்பி தியாகராசா. இராசையா பூமணி, நடராசா [illegible]கை. இராசையா சவுந்தராம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவதி. தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜரூபாவின் அன்பு பேர்த்தியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை எட்டு மணிக்கு (30-08-92 ஞாயிற்றுக்கிழமை) சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்

சுப்பிரமணியம் செல்வரட்ணம்

(மகன்)

(3103) (ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம், சாவகச்சேரி)

### மாரிமுத்து அம்பலவாணர்

மாரிமுத்து அம்பலவாணர் [முன்னாள் முகாமையாளர் யாழ்ற்றல ஸ்ரோர்ஸ் இல 82.1 ஆம் குறுக்குத் தெரு கொழும்பு. உரிமையாளர் மா.அம்பலவாணர் அடைவு கடை 82 கண்டி றோட், கிளிநொச்சி.]

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த மாரிமுத்து அம்பலவாணர் 29-08-1992 இல் சிவபதமடைந்தார் அன்னார்

தின்படி சிறிலங்காவிற்கூடாக பயணம் செய்யும் அமெரிக்கப் போர்க்கப்பல்களில் சிறிலங்காவின் கடற்படை அதிகாரிகள் இணைக்கப்படவுள்ளார்கள்.

இதன்மூலம் தொழில்நுட்பத் துறையிலும், கண்காணிப்பிலும் அதிகாரிகள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர் என மேலும் தெரியவருகிறது.

அமெரிக்க கடற்படையின் ஏழாவது பிரிவின் கமாண்டர் வைஸ் அட்மிரல் திமோதிறைற் கடந்த மாதம் கொழும்பு வந்தபோது இதனைத் தெரிவித்தார்.

காலத்திற்குக்காலம் துறைமுக நகரங்களுக்கு அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் விஜயம் செய்வதில் அமெரிக்க நலன்களைப் பாதுகாப்பது மற்றும் பிராந்தியங்களோடு பரிட்சயத்தை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஆதரவைப் பெறுவது என்பதும் அமெரிக்காவின் ஒரு பகுதி நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

என்று தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி நிருபர்களிடம் கூறினார்.

விசாரணைக் குழுவை எந்த வகையில் சந்திப்பது, அடுத்து எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வது என்பது குறித்து முடிவெடுக்க தி.மு.க.

குறித்து தமிழ் நாடு அரசு பரிசீலித்து வருகிறது எனத்தெரிவிக்கப்படுகிறது.

பத்மநாபா வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையை உயர் நீதிமன்றத்தில் உள்ள சிறப்புநீதி

வழக்கை இரகசியமாகவே நடத்தப் பொலிஸார் விரும்புகின்றனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படுகின்ற பாடசாலைகளை வேறு இடங்களில் நடத்துவதற்கு யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கைஎடுத்துள்ளது

உணவுப் பொருள்களை பாதுகாக்க

## சோமாலியாவிற்கு 3000 ஐ.நா படை செல்லும்

(ஜெனிவா)

சோமாலியாவில் பட்டினியைத் தடுக்கும் நோக்கில் உணவுப் பொருள்களின் விநியோகத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மூவாயிரம் துருப்புக்களை நிலை கொள்ள வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே ஐந்நூறு பாகிஸ்தானிய இராணுவத்தினர் சோமாலியா நோக்கி புறப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொலைக்காட்சி நிலையங்களுக்கு

## பாதுகாப்பை அதிகரிக்க தயாரிப்பாளர் கோரிக்கை

(சென்னை)

புதுவையிலும், தமிழ் நாட்டிலும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்அதிகமாகவுள்ளதால் தொலைக்காட்சி நிலையங்களில் மேலும் பந்தோபஸ்தைப் பலப்படுத்த வேண்டும் என்று தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சித் தயாரிப்பாளர் சங்கம் மத்திய அரசைக் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக மேற்படி சங்கம் மத்திய அரசுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது

### கடற்படை

தாக்குதலின் போது பலகடற்படையினர் படுகாயமடைந்தனர். இத்தளத்தில் தரித்து நின்ற நீர் உந்து விசைப்படகு ஒன்றை கைப்பற்றி வெற்றிகரமாக கடற்புலிகளின் தளம் ஒன்றிற்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

இந்த விசைப்படகு ஆழம் குறைந்த கடற்பரப்புக்களில் ரோந்து புரிவதற்காக விசேடமாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும்.

### குடாக்கடலில்

கடந்த பெப்ரவரி மூன்றாம் திகதியும் குடாக் கடலில் சிறிலங்கா கடற்படையினரின் அதிவேக விசைப்படகு ஒன்று கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டு அதிலிருந்த நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

### யாழ். வைத்திய

புதிதாக ஏற்றிக் கொள்ள விருப்பவர்கள் வவுனியா வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

### படகிலிருந்து

50 கலிபர் மேலதிக சுடுகுழல் ஒன்று, ஆயிரம் 50 கலிபர் ரவைகள், 50 கலிபர் துப்பாக்கியில் பொருத்தப்படும் விமான எதிர்ப்புக் குறிகாட்டி, தரைத் தாக்குதலுக்கான தொலை நோக்கி குறிகாட்டி, 1500 நடுத்தர ரவைகள், 10 கைக்குண்டுகள், 75 மிதவை உயிர்காப்பு உடைகள் என்பவை கைப்பற்றப்பட்டன.

## உள்வந்த வெளிச்சென்ற வாசன இலக்கங்கள் 29-08-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5408

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
27-7627, 24-1127, 28-1111, 42-0970, 27-5406, 28-4255, 26-2345, 26-0403, 26-3893, 27-7740, 26-3582, 26-5760, 26-0987, 41-8467, 24-5625, 42-0266, 36-380

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்
24-5877, 40-9188, 27-6821, 24-5775, 24-4238, 40-1293, 26-7352, 26-2737, 27-8959, 26-1741, 40-2829, 27-6579, 26-6024, 22-6073, 26-4657, 26-6842, 41-8626, 42-3419, 26-6511

### பல்லாயிரக்

செலுத்தினர். இந்த ஊர்தி அங்கிருந்து கோப்பாயிற்கு எடுத்துச் செல்லப்பட்டது

கோப்பாய் கந்தசுவாமிகோவிலில் வீரச்சாவைத் தழுவிய ஒன்பது வேங்கைகளுக்குமான அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

வலிகாமம் உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளையவன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர்.

பின்னர் உருவப்படங்களை தாங்கிய ஊர்தி ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உருவப்படங்களுக்குரிய மாவீரர்களின் நினைவுக் கற்கள் நாட்டப்பட்டன.

### ஹெலிக்கு

வெளி என்ற கிராமத்தில் இடம் பெற்றது. ரவீந்திர குமார் என்ற சிறுவனே மார்பில் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

புலி இயக்க உறுப்பினர் ஒருவர்தான் இலக்கு வைக்கிறார் என்று எண்ணியேதாழப் பறந்த விமானத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கலாம் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

## கண்ணீர் அஞ்சலி

திரு. தியோனிஸ் அலக்சான்டர்

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

(அதிபர், ஆசிரியர், சக அலுவலர்)

நடேஸ்வராக்கல்லூரி
காங்கேசன்துறை

[3104]

கடை 82 கண்டி றோட்,கிளிநொச்சி.]

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த மாரிமுத்து அம்பலவாணர் 29-08-1992 இல் சிவபதமடைந்தார் அன்னார் (காரைநகர் பலகாடு) காலஞ்சென்ற மாரிமுத்து அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் இந்திராணியின் அன்புக்கணவரும் சிவசக்தி (பிரான்ஸ்) சிவரூபி (நுவரெலியா) குணசீலன் (லண்டன்) சத்தியசீலன் [யாழ். இந்துக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலானந்தனின்[பிரான்ஸ்]மாமனரும் அரவிந்தன்(பிரான்ஸ்) ஆரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் காரைநகர் சின்னாலடியைச் சேர்ந்த VS கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்டமருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள்இல.116 அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் மைத்துனர் திரு க.சுந்தரலிங்கம் (ஆசிரியர் யாழ். புனித அந்தோனியார் கல்லூரி ஊர்காவற்துறை) அவர்களின் இல்லத்தில் இன்று (30-08-92) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

அ. சத்தியசீலன்(மகன்)

இல 116,
அம்பலவாணர் வீதி, (ஆலடி, காரைநகர்)
அத்தியடி, யாழ்ப்பாணம். (சி/4972)

## நாகலிங்கம் சற்குணம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் தொழில் புரிந்தவருமான திரு. நாகலிங்கம் சற்குணம் காலமானார்.

அன்னார் புஷ்பவதியின் அன்புக் கணவரும், பிரணவன், பிரதீபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், பற்குணம் (சிங்கப்பூர்), ஞானாம்பிகை, வடிவாம்பிகை, நற்குணம் ஆகியோரின் சகோதரனும் ராமநாதன், இலங்கைநாதன், நாகேஸ்வரியின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 12மணியளவில் சிறுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்

புஷ்பவதி
(மனைவி)

(4444)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 - ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.